# ஊராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி கோருதல்

# ஒப்பந்தப்புள்ளி

- ஒளிவு மறைவு இல்லாத ஒப்பந்த சட்டம் 43/1998.
- ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் (அ.ஆ.எண்.446/ நிதித்துறை நாள்: 26.9.2000 மற்றும் அ.ஆ.எண்.286/ ஊரக வளர்ச்சித்துறை நாள்: 31.12.1998.
- ஒரே சமயத்தில் ரூ.5000/- க்குள் மதிப்புள்ள பொருட்களை அ.ஆ.எண்.206/ நிதி(ஊதியம்) துறை நாள்: 4.7.2017-ன்படி, சான்று அடிப்படையில் கொள்முதல் செய்திடலாம்.
- ரூ.5000/-க்கும் மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும்.

# ஒப்பந்தப்புள்ளி

- ❖ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்
- ❖ஒப்பந்த அறிவிப்பு தயார் செய்தல்
- ❖முன்வைப்புத் தொகை (EMD) - மதிப்பீட்டிற்கு ஒரு சதவீதம்
- ❖பாதுகாப்புத்தொகை (Security Deposit) பெறப்பட வேண்டும்

# ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தல்

## (அ.ஆ.எண்.392 / நிதித்துறை நாள்: 18.08.2009 மற்றும்

## அ.ஆ.எண்.243 / நிதித் (ஊதியங்கள்) துறை நாள்: 21.08.2017)

- ❖ ரூ.5.00 இலட்சத்திற்குள் மதிப்பீடு உள்ள பணிகள் ஊராட்சி / ஊ.ஒ தகவல் பலகையில் விளம்பரம்.
- ❖ ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் ரூ.25.00 இலட்சத்திற்கு உட்பட்ட மதிப்பீட்டுப் பணிகள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர்
- ❖ மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் பதிவு செய்த ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட வேண்டும்.
- ❖ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / ஊ.ஒ / ஊராட்சி அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

# ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தல்

❖ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் உள்ள கட்டுமான பணிகளுக்கு மாநில ஒப்பந்த மலரிலும் (State Gazatte) செய்தித் தாள்களிலும் இணையதளம் மூலமும் விளம்பரம் செய்ய வேண்டும்.

# ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தல்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் வெளியிடப்பட வேண்டிய தினசரிகள் மற்றும் பதிப்புகளின் எண்ணிக்கை | கட்டுமான வேலைகளின் மதிப்பீடு | பொருட்கள் தளவாடங்கள் உட்பட இதர கொள்முதல் - களின் மதிப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட அளவிலான விளம்பரம் ஒரு தமிழ் தினசரி (மாவட்ட அளவிலான மதிப்பில் மட்டும்) | ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் ரூ.50.00 இலட்சம் வரை | ரூ.10.00 இலட்சங்களுக்கு மேல் ரூ.25.00 இலட்சங்கள் வரை |
| 2 | மாவட்ட அளவிலான விளம்பரம் ஒரு ஆங்கில தினசரி (மாநில பதிப்பு), ஒரு தமிழ் தினசரி (தமிழ்நாடு முழுவதும் அனைத்து பதிப்புகளும்) | ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் ரூ.3.00 கோடிவரை | ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் ரூ.3.00 கோடிவரை |

# ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் விளம்பரம் செய்தல்

## அ.ஆ.எண்.218 / செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள்: 29.09.2006

❖ வியாழக்கிழமை தோறும் ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் இலவசமாக வெளியிடப்படுகிறது.

| வ எண் | பணிகளின் மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரின் வகை |
|---|---|---|
| 1 | ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் ரூ.25.00 இலட்சத்திற்குள் | மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் |
| 2 | ரூ.25.00 இலட்சத்திற்கு மேல் | சென்னை செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர்(செய்தி) மூலமாக மாநிலம் முழுவதும் |

# ஒப்பந்தப்புள்ளி கால அவகாசம்

- ❖மதிப்பீடு ரூ.2.00 கோடி வரை 15 நாட்கள்
- ❖மதிப்பீடு ரூ.2.00 கோடிக்கு மேல் 30 நாட்கள்
- ❖வரையறுக்கப்பட்ட கால இடைவெளி குறைக்கப்பட வேண்டுமெனில், எழுத்து மூலமாக எழுதி மேல் அதிகாரியின் சிறப்பு அனுமதி பெற வேண்டும்.

# ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் முறை

- ஒப்பந்தப்புள்ளி திறக்க நிர்ணயம் செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் அப்போதுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட வேண்டும்-சட்டப்பிரிவு-8 , விதி எண்:21
- ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியிலும் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதங்களை படித்து காட்ட வேண்டும்.
- குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட வேண்டும்-சட்டப்பிரிவு-10(2), விதி எண்:30

# ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் முறை

- வேலை உத்தரவு வழங்கப்படும் போது மதிப்பீட்டு தொகையில் 5சதவீதத்திற்க்கு மேற்படாமல் பிணை வைப்புத்தொகை (Security Deposit) பெறப்பட வேண்டும்-விதி எண்:14(3)
- மதிப்பீட்டை விட 5% முதல் 15% வரை குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் கூடுதல் பிணை வைப்புத் தொகையாக 2% பெற பட வேண்டும்.
- மதிப்பீட்டை விட 15 % மேல் குறைவாக கொடுத்தால் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள மதிப்பு ஆகியவற்றிற்கு இடையேயான வித்தியாச தொகையில் 50 % கூடுதல் காப்புத்தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

# ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்கும் அலுவலர்கள்

## (அ.ஆ.எண்:203 ஊ.வ.ம.ஊ.து நாள்:20.12.2007)

### மதிப்பீட்டிற்கு உட்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளிகள் :

| வ. எண். | பணிகள் விவரம் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்கள் | ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்க வேண்டியது |
|---|---|---|---|
| 1 | பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | கிராம ஊராட்சி |
| 2 | திட்டப் பணிகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | கிராம ஊராட்சி |

# ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்கும் அலுவலர்கள்

ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகைக்கு உட்பட்ட பணிகளில், மதிப்பீட்டை விட அதிகமாக 5 % க்குள் அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் :

| வ. எண். | பணிகள் விவரம் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்கள் | ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்க வேண்டியது |
|---|---|---|---|
| 1 | பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| 2 | திட்டப் பணிகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | மாவட்ட ஆட்சித்தலைவர் |

## ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகைக்கு உட்பட்ட பணிகளில், மதிப்பீட்டை விட அதிகமாக 5 % க்கு மேல் அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ரூ.5.00 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பீட்டுப் பணிகளில் மதிப்பீட்டுக்கு கூடுதலாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள்:

| வ. எண். | பணிகள் விவரம் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்கள் | ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்க வேண்டியது |
|---|---|---|---|
| 1 | பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | இயக்குநர், ஊ.வ.ஊ.துறை |
| 2 | திட்டப் பணிகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | இயக்குநர், ஊ.வ.ஊ.துறை |

# வேலை உத்தரவு வழங்குதல்

- வேலை உத்தரவில் வேலையின் பெயர் , மதிப்பீட்டு தொகை மற்றும் வேலை முடிக்க வேண்டிய காலம் குறிப்பிட வேண்டும்.

- ரூபாய் 20 மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

# நன்றி

